கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்.யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.
முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 5ஆம் நாள் வியாழக்கிழமை
<u>I.A.No.1/2026 in O.S.No.152/2024</u>

1. திருமகள்,
2. பரணிதரன், . . . மனுதாரர்கள்/5, 6 பிரதிவாதிகள்

/எதிராக/

ரவி . . . எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 04.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.எழில்மாறன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள் தரப்பில் உ.ந.மு.சட்டம் கட்டளை 8, விதி 1A(3)–ன் கீழ் மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆவணத்தினை ஏற்றுக்கொண்டு வழக்கினை மேல் நடத்த வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் இம்மனுவில் 2ம் மனுதாரர் வழக்கில் 6ம் பிரதிவாதி என்றும், மனுதாரர் இந்த மனுவை தனக்காகவும், 2ம் மனுதாரருக்காகவும் தாக்கல் செய்வதாகவும், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு மிகவும் அவசியமான ஆவணங்களாகும் என்றும், இந்த ஆவணங்கள் மற்ற ஆவணங்களுடன் கலந்து கொண்டதால்உரிய காலததில் மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்ய



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.05 10:21:14 +0530

முடியவில்லை என்றும், அதனால் தற்போது தான் மனுவில் கண்டுள்ள ஆவணம் கிடைக்கப்பெற்றது என்றும், அதனால் அதனை கனம் கோர்ட்டில் தாக்கல் செய்வதாகவும், மனுவில் கண்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது என்றும், அந்த காலதாமதத்தை மன்னித்து ஆவணத்தை ஏற்று உத்தரவிட வேண்டியும், இல்லையென்றால் மனுதாரர் பல கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவதாகவும் தன்னுடைய உரிமையும் பாதிக்கப்படும என்றும், எனவே ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஆவணங்களை ஏற்க வேண்டி மனுதாரர் தரப்பில் மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள அனைத்து சங்கதிகளையும் இவ்எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கின்றார் என்றும், ரிசீவ் செய்ய வேண்டுமென கூறியுள்ள ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர்கள் பதிலுரை தாக்கல் செய்யும் காலத்திலேயே கிடைக்கக்கூடிய ஆவணங்கள்தான் என்றும், அவ்வாறு மேற்படி ஆவணங்கள் உரிய நேரத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர் தரப்பு சாட்சியத்தை முடித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக போடப்பட்டுள்ள நிலையில் ஆவணங்களை ரிசீவ் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதல்ல என்றும், ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், மேற்படி மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ரிசீவ் செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து தங்களுடைய பதிலுரையில் தெளிவான



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.05 10:21:21 +0530

விவரங்களையும் குறிப்பிடாமல் தற்போது தாக்கல் செய்வது ஏற்புடையதல்ல என்றும், மேலும் மேற்படி ஆவணங்கள் பதிலுரை தாக்கல் செய்யும் காலத்திலேயே பதிலுரையில் குறிப்பிட்டு தாக்கல் செய்வதற்கான வாய்ப்புகள் இருந்தும அவ்வாறு தாக்கல் செய்யாமல் வாதி தரப்பு விசாரணை முடிந்த பிறகு தாக்கல் செய்ததிலிருந்தே மேற்படி ஆவணங்கள் குறித்து வாதி தன் தரப்பு விசாரணையில் விளக்கம் அளிக்க இயலாத சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு தற்போது தாக்கல் செய்வது ஏற்புடையதல்ல என்றும், ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், மனுதாரர் மேற்படி ஆவணங்கள் குறித்த விவரங்களை தங்களுடைய பதிலுரையில் குறிப்பிடாமல் தற்போது மேற்படி ஆவணங்களை ரிசீவ் செய்ய வேண்டுமெனக் கோரி மனு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் குறித்து எதிர்மனுதாரர்/வாதி தன் தரப்பில் தன்னுடைய விசாரணையில் ஆட்சேபனை தெரிவிக்கக்கூடிய வாய்ப்பினை அளிக்காமல் தற்பொழுது தங்களுடைய தரப்பில் ஆவணங்களை ரிசீவ் செய்ய வேண்டுமென கோரி தாக்கல் செய்துள்ள மனுவினை எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர் பரம் எதிருரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் அசல் வழக்கில் 5, 6



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.05 10:21:26 +0530

பிரதிவாதிகளும், எதிர்மனுதாரர் வாதியும் ஆவார். அசல் வழக்கானது தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அசல் வழக்கானது 5, 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில் மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் மனுவில் தெரிவித்துள்ள ஆவணங்களை எதிர்வழக்குரை தாக்கல் செய்தபோதே தாக்கல் செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தது என்றும், ஆனால் மனுதாரர்கள் மேற்படி ஆவணங்கள் குறித்து எதிர்வழக்குரையில் தெரிவிக்கவில்லை என்றும், வாதி தரப்பு வழக்குவிசாரனை முடிந்தநிலையில் மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்று எதிர்மனுதாரர் ஆட்சேபனை தாக்கல் செய்தார். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டதா இல்லையா என்பதைப் பொறுத்து இறுதிக்கட்ட விசாரணையில் தான் தெரியும் என்பதாலும், அசல் வழக்கானது 5, 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்துவருவதாலும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணத்தை ஏற்றும், மனுதாரர்கள் தங்களது வழக்கினை கட்சி செய்யும் பொருட்டு அவருக்கு ஒரு வாய்ப்பு வழங்கும்விதமாகவும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், அசல் வழக்கில் பலதரப்பட்ட இடைக்கால மனுக்களை தவிர்த்திடும் பொருட்டும், அசல் வழக்கினை விரைந்து முடித்திடும் பொருட்டும்,



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.05 10:21:33 +0530

மனுதாரர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்று அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டும் என்று மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுதொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் – 5ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.05 10:21:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.05 10:21:45 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.